## வெடுக்குநாறிமலை பூசகர் உள்ளிட்ட 5 பேர்

# சிறையில் 3ஆவது நாளாக தொடரும் உண்ணாவிரதம்

### சட்டத்தரணிகள் பார்வையிட்டனர்



வெடுக்குநாறிமலையில் மகா சிவராத்திரி வழிபாடுகளில் ஈடுபட்டபோது கைது செய்யப்பட்டு சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் பூசகர் உள்ளிட்ட 5 பேரின் உண்ணாவிரதப் போராட்டம் இன்று மூன்றாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், அவர்களை வவுனியா சட்டத்தரணிகள் சிலர் பார்வையிட்டனர்.

2➤


மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 31 வியாழக்கிழமை 14.03.2024 கதிர் 202

## வட்டு. இளைஞனின் கடத்தலுக்கு உதவிய இலங்கைக் கடற்படை?

### வெளியானது வீடியோ காட்சி



வட்டுக்கோட்டை இளைஞனைக் கடத்திக் கொலை செய்வதற்குக் கடற்படையினரும் ஒரு வகையில் காரணம் என கொலை செய்யப்பட்டவரின் மனைவி குற்றஞ்சாட்டியிருந்த நிலையில், இளை- 2➤

## லஞ்சம் கிடைக்காததாலேயே கலால் திணைக்கள அதிகாரிகள் மதுப் போத்தல்களில் போலி ஸ்டிக்கர்களைக் கண்டுபிடித்தனர்!

### எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா எம்.பி. சாட்டை!



மதுபான உற்பத்தியாளர்களுக்கும் சில கலால் திணைக்கள அதிகாரிகளுக்கும் உள்ள ரகசிய பண கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஏற்பட்ட தகராறு காரணமாகவே கலால் திணைக்கள அதிகாரிகள் இம்முறை மது போத்தல்களில் போலி ஸ்டிக்கர்களை கைப்பற்றியதாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (13) இடம்பெற்ற ஊடகவியலாளர் 2➤

## மடுவில் யானை தாக்கி குடும்பப் பெண் மரணம்

மன்னார், மடு பொலிஸ் பிரிவில் வாழ்வாதாரத்துக்காகத் தொழில் செய்ய வந்த பெண்மணி, யானை மிதித்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம்தொடர்பாக மரண விசாரணையின் மூலம் தெரியவருவதாவது,

வவுனியாவில் வசித்து வந்த குடும்பம் ஒன்று கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு மன்னார், மடு பொலிஸ் பிரிவிலுள்ள கட்டையடம்பன் பகுதிக்குத் தொழில் நிமித்தம் வந்துள்ளனர்.

இவர்கள் தங்கள் நண்பன் ஒருவரின் காணியில் தோட்டம் செய்து வந்துள்ளனர்.

சம்பவம் அன்று இரவு வீட்டின் வளவுக்குள் சத்தம் கேட்டதும் இவர்கள் எழும்பிப் பார்த்தபோது யானை ஒன்று வளவுக்கள் நின்றதைக் கவனித்துள்ளனர்.

இந்த யானை யன்னல் அருகே வந்து மோப்பம் பிடிக்க ஆரம்பித்துள்ளது. இவர்கள் ஒரு குழந்தையுடன் இருந்தமையால் வீட்டை விட்டு வெளியேற முற்பட்டுள்ளனர்.

உடனே இவர்கள் அறையிலிருந்து வெளியேறுவதற்கு அவர்களின் வீட்டில் இரண்டு பாதைகள் காணப்பட்டுள்ளன. அதில் ஒன்று வெளிச்சம் உள்ள பாதையாகவும், மற்றது இருட்டுள்ள பாதையாகவும் இருந்தது.

இவர்கள் இருட்டுள்ள பாதையால் குடும்பமாக வெளியேறியுள்ளனர்.

அப்போது மரணித்த குடும்பப் பெண்ணான கே.டபிள்யூ. ஆராச்சி வியன்சேலாக்கே கயனி மதுவயந்தி குமாரி (வயது 29) பாதையில் தடக்குப்பட்டு வீழ்ந்ததும் இருட்டுக்குள் 2➤

## இரு பிள்ளைகளைக் கொலைசெய்துவிட்டு தற்கொலை முயற்சி மேற்கொண்ட தந்தை

### அம்பாறையில் பதறவைக்கும் சம்பவம்



அம்பாறை மாவட்டம், பெரிய நீலாவணையில் தந்தை ஒருவர், தனது இரண்டு பிள்ளைகளைக் கழுத்தறுத்துப் படுகொலை செய்துள்ளார்.

அதன் பின்னர் அவரும் தற்கொலை செய்ய முயன்றுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று காலை இடம்பெற்றுள்ளது என்று பெரியநீலாவணை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவு பாக்கியதுல் சாலியா வீதியில் உள்ள வீட்டில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவ இடத்தில் இரண்டு 2➤

## போதை வியாபாரி வெட்டிப் படுகொலை

ஐஸ், ஹெரோயின் போதைப்பொருட்களை விற்பனை செய்து வரும் நபர் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பயங்கர சம்பவம் கம்பஹா, கந்தானை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

நான்கு பிள்ளைகளின் தந்தையான 46 வயதுடைய நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

அவரது வீட்டுக்கு முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஹயஸ் வாகனத்தில் வந்த நான்கு பேர் அடங்கிய வன்முறைக் கும்பல், மேற்படி நபர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுவிட்டுத் தப்பியோடியுள்ளது.

2➤

## யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா ஆரம்பம்




யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் இன்று காலை கோலாகலமாக ஆரம்பமாகியது.

பல்கலைக்கழக வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமையில் நிகழ்வுகள் 2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## லஞ்சம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், போலி ஸ்டிக்கர் வியாபாரம் நடத்துவோர் சில கலால் திணைக்கள அதிகாரிகளுக்கு கொடுக்க வேண்டிய லஞ்சப் பணத்தை கொடுக்காத காரணத்தினாலேயே கடந்த வாரம் சோதனைகள் நடத்தப்பட்டு இவ்வாறு மது போத்தல்களில் போலி ஸ்டிக்கர்களை கைப்பற்றியிருந்தனர் என குறிப்பிட்டார்.

கலால் துறையினர் போலி ஸ்டிக்கர்களை கண்டுபிடித்ததாக கூறிய போதிலும் இது தொடர்பான விபரங்களை அவர்கள் முழுமையாக வெளியிடவில்லை. அதற்கு காரணம், இந்த நிறுவனங்களை பயமுறுத்தி ஏதாவது பணம் பெறும் நோக்கில் இந்த சோதனைகள் நடத்தப்பட்டதே ஆகும். இவ்வாறு இவர்களை கண்டு பிடித்ததாக பிரச்சாரம் செய்து அதன் மூலம் அவர்களை பயமுறுத்தி பின்னர் பிரச்சினையை சுமுகமாக தீர்த்து வைப்பதாக கூறி தாம் எதிர்பார்க்கும் தொகையை அடைவதே இவர்களின் நோக்கமாகும், சென்ற தடவையும் இதனையே அவர்கள் செய்திருந்தனர். எனவே, இம்முறை எந்த சூழ்நிலையிலும் இவற்றை விடுவிக்க நாம் அனுமதிக்க மாட்டோம். நியாயமாக நடப்பவர்களாயின், அடையாளம் காணப்பட்ட நபர்களை சட்டத்தின் முன் நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு செய்யப்படவில்லை எனவும் ஹர்ஷ டி சில்வா மேலும் தெரிவித்தார். (ரெம-43)

## சிறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த மகா சிவராத்திரி தினத்தன்று கைது செய்யப்பட்ட ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பித்தது.

இதனையடுத்து அவர்கள் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில், தமக்கான நீதி வழங்கக் கோரி அவர்களில் 5 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டம் இன்று வியாழக்கிழமை மூன்றாவது நாளாகவும் நீடித்து வருகின்றது. கைது செய்யப்பட்ட 8 பேரில் ஆலயப் பூசாரியார் த.மதிமுகராசா மற்றும் து.தமிழ்ச்செல்வன், தி.கிந்துயன், சு.தவபாலசிங்கம், விநாயகமூர்த்தி ஆகியோரே உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, அவர்கள் வழமைபோல் உணவை உட்கொள்வதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தால் நேற்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து வவுனியாவைச் சேர்ந்த சட்டத்தரணிகளான கொன்சியஸ் மற்றும் திலீப்காந் ஆகியோர் இன்று சிறைச்சாலைக்குச் சென்று அவர்களைப் பார்வையிட்டனர். இதன்போது அவர்கள் உண்ணாவிரதம் இருக்கின்றமையை அவர்கள் உறுதிப்படுத்தினர். (அ)

## வட்டு இளைஞனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஞனைக் கடத்துவதற்குக் கடற்படையினர் உதவும் வீடியோ காட்சிகள் தற்போது வெளியாகியுள்ளன.

தனது மனைவியுடன் காரைநகர் பகுதிக்கு கடந்த திங்கட்கிழமை மோட்டார் சைக்கிளில் சென்று விட்டு, தனது வீடு நோக்கி திரும்பிக்கொண்டிருந்த இளைஞனையும், அவரது மனைவியையும் பொன்னாலை பாலப் பகுதியில்

அமைந்துள்ள கடற்படை முகாமுக்கு அருகில் வைத்து, வன்முறைக் கும்பல் ஒன்று இரண்டு கார்களில் கடத்திச் சென்றிருந்தது. அதன்பின்னர் இளைஞன் மிக மோசமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

கடத்திச் சென்ற இளைஞனின் மனைவியை சித்தன்கேணி பகுதியில் இறக்கி விட்டு வன்முறைக் கும்பல் தப்பிச் சென்றிருந்தது.

வன்முறைக் கும்பல் தம்மை வழிமறித்துத் தாக்கி கடத்த முற்பட்ட வேளை, தாம் உதவி கோரி பொன்னாலை கடற்படை முகாமுக்குச் சென்ற வேளை அங்கிருந்த கடற்படையினர் தம்மைத் தாக்கி விரட்டினர் என்றும், தனது கணவரின் படுகொலைக்குக் கடற்படையினரும் காரணம் என்றும் படுகொலை செய்யப்பட்ட இளைஞனின் மனைவி தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், வன்முறைக் கும்பலில் நால்வரைக் கைது செய்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், கடற்படை முகாமில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமரா காணொளிகளைப் புலனாய்வாளர்கள் பெற்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அந்தக் காணொளியில் இளைஞனும் மனைவியும் தஞ்சம் கோரி கடற்படை முகாமுக்கு ஓடி வருவதும், அங்கு கடற்படையினர் அவர்களைத் தாக்குவதும், வன்முறைக் கும்பல் கடற்படையின் கண் முன்னே முகாம் பகுதியில் வைத்தே கணவன், மனைவியைக் கடத்தி செல்வதும் பதிவாகியுள்ளது.

கடற்படையினர் துப்பாக்கிகளுடன் கடத்தல்காரர்களுக்கு உதவி செய்வது காணொளியில் தெளிவாகப் பதிவாகியுள்ள நிலையில் கடத்தலுக்குக் கடற்படையினர் உதவினார்கள் என்ற மனைவியின் குற்றச்சாட்டுக்கு காணொளி வலுச் சேர்த்துள்ளது. (அ)

## மடுவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நின்ற யானை அவரின் மேல் மிதித்தே மரணம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணையை மரண விசாரணை அதிகாரி ஏ.ஆர்.நசீர் மேற்கொண்டார். (அ)

## இரு பிள்ளைகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிள்ளைகளின் சடலங்களும் இரத்த வெள்ளத்தில் காணப்பட்டன.

மனவளர்ச்சி குன்றிய ஆண், பெண் பிள்ளைகளைக் கொலை செய்துவிட்டு தற்கொலையில் ஈடுபட்ட தந்தையும் காயமடைந்த நிலையில் கல்முனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவத்தில் முஹம்மது கலீல் முகம்மது றிகாஸ் (வயது 29), முஹம்மது கலீல் பாத்திமா பஸ்மியா(வயது 15) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

அவர்களது தந்தையான முஹம்மது மிர்சா முகமது கலீல் (வயது 63) இரத்தக் காயங்களுடன் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மரணமடைந்த பிள்ளைகளின் தாய் கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்துவிட்டார் என்று மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்கவின் வழிநடத்தலில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## போதை வியாபாரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர், வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், கொலைச் சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## போதை வியாபாரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆரம்பமாகின. இந்தப் பட்டமளிப்பு விழாவின்போது 2,873 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படுகின்றன. அத்துடன் 46 தங்கப் பதக்கங்கள்,

9 புலமைப் பரிசில்கள் மற்றும் 48 பரிசில்களும் வழங்கப்படுகின்றன. (அ)

# சபாநாயகரின் தலைவிதி 20 ஆம் திகதி நிர்ணயம்!

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது இரு நாட்கள் விவாதம் நடத்துவதற்கு கட்சி தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 19 மற்றும் 20ஆம் திகதிகளில் விவாதம் நடத்தப்பட்டு, 20 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

நாடாளுமன்ற நடவடிக்கை தொடர்பான குழு இன்று கூடியது. இதன்போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# கண்டி விபத்தில் இளம் யுவதி பலி

மோட்டார் சைக்கிளும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் இளம் யுவதி ஒருவர் சாவடைந்துள்ளார்.

இந்த விபத்து கண்டி, மினிப்பே பிரதேசத்தில் நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் மேற்படி யுவதி வேலை முடிந்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது வீதியில் எதிரே வந்த ஓட்டோ மோதியுள்ளது.

இந்தக் கோர விபத்தில் யுவதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளும் பலத்த சேதமடைந்துள்ளது.

ஓட்டோ சாரதியும், அதில் பயணித்த இரண்டு பெண்களும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பூஜாப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய மேரி கனிஷ்டா என்ற யுவதியே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்று தெரிவித்த பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# தம்பிலுவில் கிராமத்தின் முதலாவது மருத்துவப் பேராசிரியருக்கு வரவேற்பு

(வி.ரி.சகாதேவராஜா)

தம்பிலுவில் கிராமத்தில் முதலாவது மருத்துவத் துறை பேராசிரியரான கிழக்கு பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீடத்தின் குடும்ப நலத்துறை பேராசிரியர் வைத்திய கலாநிதி கந்தசாமி அருளானந்தத்துக்கு நேற்று பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

தம்பிலுவில் விநாயகபுரம் திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் அதன் பணிப்பாளர் கண.இராஜரத்தினம் கண்ணன் தலை-லமையில் இவ்வரவேற்பு அளிக்கப்பட்டது. குருகுல மாணவர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அண்மையில் குடும்ப நலத்துறை பேராசிரியராக பதவி உயர்வு பெற்ற தம்பிலுவிலைச் சேர்ந்த டொக்டர் கந்தசாமி அருளானந்தம் வரவேற்கப்பட்டு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

1984 இல் யாழ் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தில் இணைந்தார்.

வைத்திய கலாநிதியாகி அக்கரைப்பற்று ஆதர வைத்தியசாலை, கொழும்பு தேசிய வைத்தியசாலை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, திருக்கோவில் ஆதரவைத்திய சாலை போன்ற பணியிடங்களில் கடமையாற்றி இரண்டாயிரத்தி ஒன்பதில் கிழக்கு பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீடத்தில் ஆரம்ப சுகாதார துறை விரிவுரையாளராக பதவி ஏற்றார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் முதலாவது குடும்ப நல துறை பேராசிரியராகவும் தம்பிலுல் கிராமத்தில் முதலாவது மருத்துவ துறை பேராசிரியராகவும் திகழ்கிறார்.

கிழக்குப் பல்கலைக்கழக மூதவை மற்றும் பேரவையின் உறுப்பினருமான இவர் மனிதாபிமானி உலகத் தமிழ்மாமணி வைத்தியாஜோதி போன்ற பட்டங்களை பெற்றுள்ளார். இவர், இலங்கையில் குடும்ப நல துறையில் தமிழ் பேசும் சமூகத்தில் முதலாவது பேராசிரியராவார்.



## அதிவேக நெடுஞ்சாலை கடமைகளை தனியார் பாதுகாப்பு நிறுவனத்திற்கு வழங்க தீர்மானம்




அதிவேக நெடுஞ்சாலைகளில் கடமையாற்றிய பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அந்த நடவடிக்கைகளில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளனர். பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பணிகளுக்காக ரத்னா லங்கா தனியார் பாதுகாப்பு நிறுவனத்தை சேர்ந்தவர்கள் நியமிக்கப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சமிந்த அதுலுகே தெரிவித்துள்ளார்.

நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களின் போது உயிர் காக்கும் விதமாக தீயணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த பொலிஸ் விசேட அதிரடிப்படையினரை அப்பணிகளிலிருந்து அகற்றவுள்ளமை குறித்து பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ரெம-40)

## தென்கிழக்கு பல்கலையில் "ஸிஹாஹ் ஸித்தா" கிரந்தங்களின் மொழிபெயர்ப்பு வெளியீடு



இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணைந்து இந்திய தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகம் நடாத்திய தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகத்தின் 'ஸிஹாஹ் ஸித்தா' கிரந்தங்களின் (தமிழ்) மொழிபெயர்ப்புத் தொகுதி அறிமுகமும் 'மிஷ்காத்துல் மஸாபீஹ்' (தமிழ்) நூல் வெளியீடும் அண்மையில் இடம்பெற்றன.

உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில்பல்கலைக்கழக கலை கலாசார கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மருதமுனை சார்பாக ஜம்இய்யத்துல் உலமாசபை தலைவர் அஷ்செய்க் எப்.எம்.அகமது அன்சார் மௌலானா நூலினைப் பெற்றுக்கொண்டார்.




## எம்.பி. யின் அறைக்குள் சாரதியில்லா லொறி




பலாங்கொடை, மிரிஸ் வத்தையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொடவின் வீட்டின் மீது சாரதி இல்லாத லொறியொன்று மோதியுள்ளதாக பலாங்கொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் ஐம்பது மீற்றர் தொலைவிலிருந்து இரவு 7 மணியளவில் சாரதியற்ற லொறியொன்று தனது அறைக்குள் புகுந்துள்ளமை தொடர்பில் தான் ஆச்சரியமடைவதாகவும், இது தொடர்பில் பொலிஸ் மா அதிபர் மற்றும் பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததாகவும் எம்.பி. காமினி குறிப்பிட்டுள்ளார்.

லொறி வந்த போது குறித்த எம்.பி. வீட்டில் இருக்கவில்லை எனவும், வீட்டின்மீது லொறி மோதுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னரே அவர் தனிப்பட்ட ஒரு தேவைக்காக வீட்டை விட்டு வெளியே சென்றதாகவும், அதன்போதே குறித்த லொறி வெளியே காணப்பட்ட மின்கம்பத்தையும், சுவரையும் உடைத்துக் கொண்டு எம்.பி. யின் அறைக்குள் புகுந்துள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ரெம-42)

# ஜோ பைடனும் டொனால்ட் ட்ரம்ப்பும் அதிபர் தேர்தலில் மீண்டும் மோதல்!





அமெரிக்காவின் அடுத்த அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்காக இந்த ஆண்டு நடைபெறவிருக்கும் தேர்தலில் தற்போதைய அதிபர் ஜோ பைடனும், முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பும் மீண்டும் மோதுவது உறுதியாகியுள்ளது.

அதிபர் வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதற்காக ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சிகள் 4 மாகாணங்களில் புதிதாக நடத்திய வாக்கெடுப்புகளில் இரு தலைவர்களும் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இந்த முடிவு ஏற்பட்டுள்ளது.

81வயதாகும் ஜோ பைடன், ஜோர்ஜியா, ஹவாய், மிசிஸிப்பி, வோஷிங்டன் ஆகிய மாகாணங்களிலும், வெளிநாடுவாழ் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களிடமும் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட உள்கட்சி வாக்கெடுப்பில் 254 வாக்குகளைப் பெற்றார். அதையடுத்து, அவருக்கு மொத்தம் 2,107 கட்சிப் பிரதிநிதிகளின் ஆதரவு கிடைத்துள்ளது.

மொத்தமுள்ள 3,933 கட்சிப் பிரதிநிதிகளின் வாக்குகளில் 1,968 வாக்குகள் பெற்றாலே வரும் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட முடியும் என்ற நிலையில், அந்த எண்ணிக்கையை ஜோ பைடன் கடந்துவிட்டதால் அவர் தேர்தலில் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது. அதையடுத்து, இல்லினாய்ஸ் மாகாணம், சிகாகோவில் வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் ஜனநாயகக் கட்சி மாநாட்டில் கட்சி வேட்பாளராக பைடன் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படுவார்.

இதற்கிடையே, ஜோர்ஜியா, ஹவாய், மிசிஸிப்பி, வோஷிங்டன் ஆகிய 4 மாகாணங்களிலும் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற குடியரசுக் கட்சி அதிபர் வேட்பாளர் போட்டியில் டொனால்ட் ட்ரம்ப் (77) வெற்றி பெற்றார். அந்த 4 பகுதிகளிலும் இருந்து ட்ரம்ப்புக்கு 161 கட்சிப் பிரதிநிதிகளின் வாக்குகள் கிடைத்தன. இத்துடன், அதிபர் தேர்தல் வேட்பாளராக ட்ரம்ப் போட்டியிடுவதற்கு 1,241 கட்சிப் பிரதிநிதிகள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு 1,215 வாக்குகளே போதும் என்ற நிலையில், அந்த எண்ணிக்கையை டிரம்ப் கடந்துள்ளார். அதையடுத்து, தேர்தலில் அதிபர் ஜோ பைடனை எதிர்த்து ட்ரம்ப் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது. அந்தத் தேர்தலில் குடியரசுக் கட்சியின் அதிகாரப்பூர்வ வேட்பாளராக விஸ்கான்ஸினின் மாகாணம், மில்வாகி நகரில் வரும் ஜூலை மாதம் நடைபெறவிருக்கும் குடியரசுக் கட்சி மாநாட்டில் ட்ரம்ப் அறிவிக்கப்படுவார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் நடைபெற்றதைப் போலவே, இந்தத் தேர்தலிலும் ட்ரம்ப்புக்கும் ஜோ பைடனுக்கும் இடையிலான பிரசார மோதல் மிகவும் காரசாரமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றால், அது அமெரிக்க மற்றும் உலக ஜனநாயகத்துக்கு ஆபத்து என்று பைடன் கூறிவருகிறார். அதனை மையப்படுத்தியே அவர் தேர்தல் பிரசார உத்தி இருக்கும் என்று கூறப்படுகிறது.


அரசியல் பழிவாங்கல், சுயநலன்கள் மீதான அக்கறை ஆகியவற்றின் அடிப்படையிலே ட்ரம்ப் தேர்தலை சந்திப்பதாகவும், ஜனநாயகக் கட்சி மட்டுமே அமெரிக்க மக்களுக்காக செயல்படும் என்றும் தனது பிரசாரத்தில் பைடன் வலியுறுத்துவார் என்று கூறப்படுகிறது.

ஏற்கெனவே, கடந்த தேர்தலில் தனது வெற்றியை பைடன் தட்டிப்பறித்துவிட்டார் என்று குற்றஞ்சாட்டும் ட்ரம்ப், அமெரிக்காவின் மிக மோசமான அதிபர் என்று பைடனை விமர்சித்துவருகிறார். அதிபர் தேர்தல் வேட்பாளராவது உறுதியானவுடன் ட்ரம்ப் வெளியிட்டுள்ள அறிக்கையில், “ஜோ பைடனைத் தோற்கடிப்பது மிகவும் முக்கியமானது. அதனால் எப்போதையும்விட மிகத் தீவிரமான பிரசாரத்தில் ஈடுபடவேண்டியது அவசியம்’ என்று வலியுறுத்தியுள்ளார். எனவே, இந்தத் தேர்தலில் பிரசாரம் மிகவும் பரபரப்பானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவில் ஒரு முறை அதிபர் தேர்தலில் போட்டியிட்ட இரு வேட்பாளர்கள் அடுத்த தேர்தலில் மீண்டும் மோதுவது 1956 ஆம் ஆண்டுக்குப் பிறகு இதுவே முதல்முறை. இதற்கு முன்னர் அந்த ஆண்டில்தான் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த ட்வைட் டி. ஐசன்ஹோவர் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அட்லாய் ஸ்டீவென்சனை எதிர்த்துப் போட்டியிட்டார். அந்தத் தேர்தலில் அதிபர் ஐசன்ஹோவரே மீண்டும் வெற்றி பெற்றார்.

(04)

## ஜப்பானில் தனியார் நிறுவனம் உருவாக்கிய ரொக்கெட் விண்ணில் ஏவிய சில செக்கன்களில் வெடித்துச்சிதறியது!



ஜப்பானில் தனியார் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட ரொக்கெட் ஒன்று கவுன்டவுன் முடிந்து விண்ணுக்கு ஏவப்பட்ட சில நொடிகளில் வெடித்துச் சிதறியுள்ளது. ஜப்பான் சார்பில் விண்ணுக்குச் செலுத்தப்பட்ட முதல் தனியார் ரொக்கெட் இதுவாகும்.

மேற்கு ஜப்பானின் வகாயாமா பகுதியின் குஷிமோடோ ஏவுதளத்திலிருந்து ஸ்பேஸ் வன் என்ற தனியார் நிறுவனத்தின் ரொக்கெட் நேற்று விண்ணில் ஏவப்பட்டது. பெரும் புகையுடன் விண்ணை நோக்கி கிளம்பிய ரொக்கெட் புறப்பட்ட சில நொடிகளில் வெடித்துச் சிதறியது.

ஸ்பேஸ் வன் என்பது டோக்கியோவைச் சேர்ந்த தனியார் விண்வெளி ஆய்வு நிறுவனமாகும். 2018 இல் உருவான இந்த நிறுவனத்தின் சார்பில் விண்ணுக்கு சொந்தமாக ரொக்கெட்களை அனுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன்படி கைரோஸ் வகையைச் சேர்ந்த 60 அடி உயரம் கொண்ட ரொக்கெட்டை அவர்கள் உருவாக்கினர். இதில் தனியார் செயற்கைக்கோளுடன் அரசு சார்பில் சிறிய செயற்கைக்கோளும் உடன் அனுப்பப்பட்டது.

ஸ்பேஸ் வன் நிறுவனத்துக்குச் சொந்தமான குஷிமோடோ ஏவுதளத்திலிருந்து கவுன்டவுன் முடிந்ததும் ரொக்கெட் விண்ணில் ஏவப்பட்டது. எனினும் விண்ணில் பறக்கத் தொடங்கிய சில நொடிகளில் ரொக்கெட் வெடித்துச் சிதறியது. வெடித்துச் சிதறியதற்கான காரணம் குறித்து ஆய்வு செய்யப்படும் என ஸ்பேன் வன் நிறுவனத்தின் இது குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, ஜப்பானில் கடந்த ஜூலை மாதம் ரொக்கெட் எஞ்சின் ஒன்று சோதனையின்போது 50 விநாடிகளில் வெடித்துச் சிதறியது நினைவுகூரத்தக்கது.

(04)



## ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் மொஹமட் ஷமி விளையாடார்!

கணுக்காலில் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டுள்ள இந்திய அணியின் நட்சத்திர வேகப் பந்துவீச்சாளர் மொஹமட் ஷமி, ஜூன் மாதம் நடைபெறவுள்ள ஐசிசி ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் விளையாடமாட்டார் என தகவல் வெளியாகியுள்ளது.

ஆயினும், அதன் பின்னராக எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவர் விளையாடுவதற்கான உடல் நலத்தைப் பெற்றுவிடக்கூடும் என இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாளர் ஜெய்ஷா கூறியுள்ளார்.

இதனிடையே, கார் விபத்தில் சிக்கிப் படுகாயமடைந்து, கடந்த ஓராண்டுக்கு மேலாக ஓய்வில் இருந்த இந்திய அணியின் விக்கெட் காப்பாளரான அதிரடித் துடுப்பாட்ட வீரர் ரிஷப் பண்ட், இம்முறை ஐபிஎல் தொடரில் சிறப்பாக செயல்பட்டால் அவர் நிச்சயம் ரி-20 உலகக் கிண்ணத் தொடருக்கான அணித் தேர்வில் உள்ளடங்குவார் எனவும் ஜெய் ஷா மேலும் தெரிவித்துள்ளார்.

(04)

## நேபாள நாடாளுமன்றத்தில் நம்பிக்கை கோரும் தீர்மானத்தில் பிரதமர் பிரசண்டாவுக்கு வெற்றி!

*நேபாள நாடாளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை கொண்டுவரப்பட்ட நம்பிக்கை கோரும் தீர்மானத்தில் பிரதமர் புஷ்பகமல் தாஹால் பிரசண்டா வெற்றி பெற்றுள்ளார்.*

*இதற்காக 275 இடங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் தீர்மானத்துக்கு ஆதரவாக 157 எம்.பி.க்கள் வாக்களித்தனர். சிபிஎன் (மாவோயிஸ்ட் மையம்) கட்சித் தலைவரான பிரசண்டா, ஷேர் பகதூர் தேவுபா தலைமையிலான நேபாள காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து 15 மாதங்களுக்கு முன்னர் ஆட்சியமைத்தார்.*

*எனினும், பல்வேறு விவகாரங்களில் இரு கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டதால் கூட்டணியை முறித்துக்கொள்வதாக கடந்த 4 ஆம் திகதி திடீரென அறிவித்த பிரதமர் பிரசண்டா, முன்னாள் பிரதம் கே.பி. ஒலியின் சிபிஎன்-யுஎம்எல் கட்சியுடன் புதிய கூட்டணியை ஏற்படுத்திக்கொண்டார்.*

*நேபாள அரசமைப்புச் சட்டத்தின்படி, ஆளும் கட்சிக்கு அளித்து வந்த ஆதரவை ஒரு கட்சி திரும்பப் பெற்றால், நாடாளுமன்றத்தில் நம்பிக்கை கோரும் தீர்மானத்தைக் கொண்டு வந்து தனது பலத்தை பிரதமர் மீண்டும் நிரூபிக்கவேண்டும் என்பது நடைமுறையாகும்.*

*(04)*





# நிந்தவூர் கராத்தே பாடசாலையின் கராத்தே தரப்படுத்தல் மற்றும் விருது வழங்கும் நிகழ்வு

(எம்.எம்.றம்ஸீன்)

நிந்தவூர் பிரதேச சபை மண்டபத்தில் கராத்தே தரப்படுத்தல் மற்றும் கௌரவிப்பு நிகழ்வு அம்பாறை மாவட்ட எஸ்கேஎம்எஸ் கராத்தே பாடசாலையின் கராத்தே பயிற்றுவிப்பாளர் எம்.ரீ.அஹமட் நிம்ஷி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக கல்முனை இராணுவ படைப்பிரிவு தலைமையகத்தின் அதிகாரி மேஜர் ஷரூவன் மற்றும் எஸ்கேஎம்எஸ் பாடசாலையின் தலைவரும் சுஹாரி சோட்டோக்கன் கராத்தே சங்கத்தின் பிரதம போதனாசிரியருமான சிஹான் எம்.எஸ்.வஹாப்தீன் மற்றும் கல்முனை பிராந்தியத்தின் விளையாட்டு ஊக்குவிப்பாளரும் சமூக சேவையாளரும் கல்முனை பெஸ்டர் நிறுவனத்தின் உரிமையாளருமான ஏ.எம்.றியாஸ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

கௌரவ விருந்தினர்களாக அட்டாளைச்சேனை கல்வியற்கல்லூரி விரிவுரையாளர் எம்.ஐ.எம். அஹமட் /ஹஸைன் மற்றும் கிழக்கு மாகாணத்தின் ருளுமுரு பிரதிநிதியும் சுஹாரி சோட்டோக்கன் கராத்தே சங்கத்தின் பொதுச் செயலாருமான என்.ஸதாம் மற்றும் சுஹாரி கராத்தே சங்கத்தின் கராத்தே ஒருங்கிணைப்பாளர் ஏ.ஸி.எம்.பிர்னாஸ் ஆசிரியர் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர் .

இந்நிகழ்விற்கு எஸ்கேஎம்எஸ் பாடசாலையின் நிந்தவூர் பிராந்தியம் மற்றும் பொத்துவில் பிராந்தியங்களிலிருந்து மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

தரப்படுத்தல் நிகழ்வில் சித்தி அடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ்களும், கடந்த காலங்களில் கராத்தே போட்டிகளில் திறமைகளை வெளிப்படுத்திய வெற்றியாளர்களுக்கு அதிதிகளினால் விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டன

# இலங்கையில் தினமும் இரண்டு காசநோயாளிகள் இறக்கின்றனர்

## மேல் மாகாணத்திலேயே அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்

### தேசிய காசநோய் ஒழிப்புப் பிரசாரப் பிரிவு தெரிவிப்பு



நாட்டில் இனங்காணப்பட்ட காசநோயாளர்களில் இருவர் ஒவ்வொரு நாளும் இறக்கின்றனர் என தேசிய காசநோய் ஒழிப்புப் பிரசாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

உலக காசநோய் தினம் இம்மாதம் 24ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளதுடன், இது தொடர்பில் நேற்று (13ஆம் திகதி) கொழும்பு சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இது தொடர்பான விபரங்கள் தெரிவிக்கப்பட்டன.

இலங்கையில் தொற்று நோய்களில் அதிகளவில் காசநோயால் பாதிக்கப்பட்டவர்களே அதிகளவில் மரணடைந்திருப்பதாக பதிவுகள் காட்டுவதாகவும், கடந்த 2023 ஆம் ஆண்டு இலங்கையில் 9358 காசநோய்கள் பதிவாகியுள்ளதாகவும் மேற்படி பிரசாரப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய, இலங்கையில் அதிகமான காசநோயாளிகள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதாகவும், அவர்களில் அதிகமானோர் கொழும்பு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் ஆவர். குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் பதிவாகும் காசநோயாளர்களில் பெரும்பாலானோர் கொழும்பு மாநகர சபை பகுதி யில் பதிவாகியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. இரண்டு வாரங்களுக்கு மேல் நீடிக்கும் இருமல், மாலையில் லேசான காய்ச்சல், உடல் எடை குறைதல், பசியின்மை, இரவில் அதிகம் வியர்த்தல், தீவிர சோர்வு, சுவாசிப்பதில் சிரமம், சளியுடன் இரத்தம் வெளியேறுதல் போன்றவை காசநோயின் அறிகுறிகள் ஆகும் எனவும் மருத்துவர்கள் தெரிவித்தனர்.

காசநோய்க்கான பரிசோதனைகளை இலங்கையிலுள்ள அனைத்து மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் அரச சுகாதார நிலையங்களில் இலவசமாக மேற்கொள்ள முடியும் எனவும், மருத்துவ ஆலோசனையின் படி சரி யான நேரத்தில் முறையான சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் இந்நோயை முழுமையாக குணப்படுத்த முடியும் எனவும் காசநோய் ஒழிப்புப் பிரச்சாரப் பணிப்பாளர் மருத்துவர் பிரமித்தா சாந்திலதா தெரிவித்தார்.

'ஆம், எம்மால் காசநோயை ஒழிக்க முடியும்' எனும் தொனிப்பொருளிலேயே இம்முறை உலக காசநோய் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெம-44)

# கற்பிட்டி சியாஜ்க்கு சிறீ விக்ரமகீர்த்தி விருது

## ஊடகத்துறை - சமூக சேவைக்கு கௌரவம்

(சிபாக்- ஸபீஹா)

இலங்கை இந்திய நட்புறவு ஒன்றியத்தின் "மலையகம் 200 " எனும் தொனிப் பொருளில் சாதனையாளர் விருது வழங்கும் விழா ஞாயிறு மாலை கண்டி கெப்பட்டிபொல மண்டபத்தில் ஒன்றியத்தின் தலைவர் தேசபந்து எம் தீபன் தலைமையில் நடைபெற்றது.

இவ் விழாவில் கற்பிட்டியைச் சேர்ந்த எம்.எச்.எம் சியாஜ் ஊடகத்துறை மற்றும் சமூகசேவை செயறபாட்டிற்கான சாதனையாளர் விருதாக "சிறீ விக்ரமகீர்த்தி " விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவ்விருது வழங்கல் விழாவின் பிரதம அதிதியாக முன்னாள் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்கவும் அதிதியாக தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் டி. செந்தில்வேலவர் ஆகியோருடன் இன்னும் விசேட அதிதிகள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கற்பிட்டி பிரதேசத்தில் சுமார் 24 வருடங்களுக்கு மேலாக ஊடகத்துறையில் தன்னை அர்ப்பணித்து பல பத்திரிகைகளின் கற்பிட்டி பிரதேச செய்தியாளராகவும் கற்பிட்டி பிரதேசத்திற்கான பத்திரிகைகளாக "அரவம் ", "விடியல்," மற்றும் கற்பிட்டியின் முதலாவது மின்னிதழ் பத்திரிகையான "கறுப்பு வெள்ளை" என்பவற்றின் பிரதம ஆசிரியராக இருந்து தனி முயற்சி மற்றும் ஒரு சிலரின் உதவிகள் ஊடாக பத்திரிகைகளை வெளியீட்டுள்ள இவர், சமூக சேவை பணியில்



"இஸ்லாமிய இளைஞர் நலன்புரி ஸ தகா ஒன்றியம்" மற்றும் "சமூக அபிவிருத்தி ஒன்றியம்", "நஷ்ர் பவுண்டேடஷன்" போன்ற அமைப்புக்களை 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நண்பர்கள் சிலருடன் ஆரம்பித்து இன்று வரை பல்வேறு பட்ட ரீதியில் சமூக சேவை பணிகளையும் இவர் கற்பிட்டியில் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்விருது வழங்கும் விழாவில் நாடு முழுவதிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 150 விற்பன்னர்கள் சிறீ விக்ரமகீர்த்தி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

யாழ் முற்றம்
Face of Jaffna
கறுவா, சந்தனம், கராம்பு, கோப்பி, கொக்கோ, மிளகு ஆகிய மரக்கன்றுகள் விற்பனைக்கு உள்ளன.
076 443 8620
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்





# பொலிஸ் குதிரைகளுக்கு லாயங்களில் மின்விசிறி பொருத்தப்பட்டுள்ளதாம்!

## உயர் வெப்பநிலையே காரணமாம்

இன்றைய நாட்களில் நாட்டில் கடும் வெப்பநிலை நிலவுவதால், காலை வேளைகளில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளுக்கு மாத்திரமே பொலிஸ் குதிரைகள் பயன்படுத்தப்படுவதாக பொலிஸ் குதிரைப்படை பிரிவின் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

குளிர் காலநிலை கொண்ட நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட இந்த குதிரைகளை கடும் வெப்பத்திலிருந்து பாதுகாக்கும் வகையில், அவை வைக்கப்பட்டுள்ள லாயங்களில் மின்விசிறிகள் பொருத்தப்பட்டு, தினமும் அந்த குதிரைகள் குளிக்க வார்க்கப்படுவதாகவும், கண்டி மற்றும் நுவரெலியாவில் உள்ள பொலிஸ் லாயங்களில் இவ்வாறு 39 குதிரைகள் வைக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விழாக்களுக்கு மிகவும் அரிதாகவே குதிரைகள் தேவைப்படுவதுண்டு. ஆனால், இந்த குதிரைகளைப் பயன்படுத்த வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டால் காலை வேளைகளில் மாத்திரமே அவை பங்கேற்க செய்யப்படுகின்றன எனவும் பொலிஸ் குதிரைப்படை தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ரெம-41)

# மூன்று மாதங்களில் 30 துப்பாக்கி வேட்டு! 21 நபர்கள் உயிரிழப்பு, 17 பேர் காயம்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு



இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற 30 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 21 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களில் 14 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ நேற்று தெரிவித்தார்.

இவற்றுள் 17 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் சட்டவிரோத ஏற்பாட்டு குழுக்களால் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டவை எனவும், ஏனைய 13 சம்பவங்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக நடத்தப்பட்டவை என தெரிய வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குற்றச் செயல்களை தடுப்பதற்கு தற்போதுள்ள சட்டத்தின்படி பொலிஸார் செயற்படுவார்கள் எனவும், இந்த குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் தப்பிப்பதற்கு எந்தவொரு முயற்சியை எடுத்தாலும், அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

(ரெம-37)

# வறட்சியான காலநிலையிலும் நீர்த்தேக்கங்கள் வற்றவில்லை!

## நீர்ப்பாசனப் பணிப்பாளர் சுகீஸ்வர



நாடளாவிய ரீதியில் பல பகுதிகளில் வறட்சியான காலநிலை நிலவுகின்ற போதிலும், நீர்ப்பாசன நீர்த்தேக்கங்கள் மற்றும் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டங்கள் இதுவரையில் பாரியளவில் பாதிக்கப்படவில்லை என நீர்ப்பாசன பணிப்பாளர் எஸ். டி. சுகீஸ்வர தெரிவித்துள்ளார்.

நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குட்பட்ட 73 பிரதான நீர்த்தேக்கங்களில் நீர் கொள்ளளவு 90 வீதமாக காணப்படுவதாகவும், விவசாய சேவைகள் திணைக்களத்திற்கு சொந்தமான சிறிய நீர்த்தேக்கங்களில் நீர் மட்டம் குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மின்சாரத்தை உற்பத்தி செய்யும் காசல்ரீ நீர்த்தேக்கம் உட்பட பல நீர்த்தேக்கங்களில் நீர் கொள்ளளவு குறைவாக உள்ள போதிலும், ஒட்டுமொத்தமாக பார்க்கையில் அந்த நீர்த்தேக்கங்களில் நீர் பெருமளவு குறைவடையவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ரெம-45)






## யாழ். பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

பாடசாலை திறந்த வெளி அரங்கில் மூன்று நாட்கள் தொடர்ந்து நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மூன்று நாள் நிகழ்வுகளும் பாடசாலை அதிபர் பரமலிங்கம் சந்திரபாகு தலைமையில் இடம்பெறவுள்ளன.

நாளை நடைபெறும் முதலாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் கந்தசாமி கண்ணன் கலந்துகொள்கின்றார்.

நாளைமறுதினம் சனிக்கிழமை இடம்பெறும் இரண்டாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் கலந்துகொள்கின்றார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மூன்றாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியபாலன் கலந்துகொள்கின்றார

## ஏமாற்றப்படும் விவசாயிகள்!



(ஹஸ்பர் ஏ.எச்)

நெற் செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகள் அரசாங்கத்தினால் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டுக் கொண்டே வருகிறார்கள், என கிண்ணியா விவசாய சம்மேளன ஒன்றியத்தின் ஊடகப் பேச்சாளர் எம் .எம் .மஹ்தி தெரிவித்துள்ளார். கிண்ணியாவில் இன்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசானது 7 மாவட்டங்களில் இருந்து விவசாயிகளிடம் நெல்லை கொள்வனவு செய்வதற்காக தற்போது நிதியை ஒதுக்கி மனுக்களை கோரியிருக்கின்றது.

ஆனால், தற்போது எந்த விவசாயிகளிடமுமே நெல் இல்லை. அறுவடை ஆரம்பிக்கின்ற போது நெல் கொள்வனவு செய்வதற்கு பதிலாக அறுவடை செய்யப்பட்ட அனைத்து நெல்லும் அநியாய விலைக்கு தனியாருக்கு விற்றுத் தீர்ந்த பிறகு, கொள்வனவு செய்வதற்கு அரசு வருகிறது.

கடன்பட்டு விவசாயத்தைச் செய்கின்ற விவசாயிகள் அறுவடையின் போது என்ன விலை என்றாலும் நெல்லை விற்று கடன்களை அடைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் காணப்படுகின்றார்கள்.

சேதனப் பசளை என்று அனைத்து விவசாயிகளையும் விவசாயத்தையும் முழுமையாக சேதம் செய்தார்கள். பயிர்ச் செய்கை ஆரம்பிக்க முன் பாவிக்க வேண்டிய பசளைக்கு உர மானியம் என்று மிக சிறிய தொகையினை அறுவடையின் போது வழங்குகின்றார்கள். அறுவடை செய்யும் போது கொள்வனவு செய்ய வேண்டிய நெல்லை விட்டுவிட்டு, விவசாயிகளிடம் நெல் இல்லாத போது அதற்கான பணத்தை ஒதுக்குகிறார்கள்.

இவ்வாறே தொடர்ந்தும் படம் காட்டப்பட்டு ஏமாற்றப்படுகின்ற போது எவ்வாறு விவசாயகளால் மீள முடியும்? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.03.2024 இல் வெளியிடப்பெற்றது.